பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 12 வியாழக்கிழமை 28.07.2022 கதிர் 265

### இது ரகசியம் அல்ல!

‘தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்குமாம்’ என்பர். இது வயது முதிர்ந்த சம்பந்தன் ஐயாவுக்கும் பொருந்தும் என்றுதான் தெரிகிறது.

கூட்டமைப்புக்குள் பல அலப்பறைகள் அவ்வப்போது கட்ட விழும். தெரியாதவர் ☞ 2

# முதலாவது பலப்பரீட்சையில் ரணில் அரசு பெரும் வெற்றி!

## 57 மேலதிக வாக்குகளால் அவசரகாலச் சட்டம் நீடிப்பு

★120 பேர் ஆதரவு

★63 பேர் எதிர்ப்பு

★சபாநாயகர் தவிர்ந்து 41 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு, நாடாளுமன்றத்தில் நேற்று முதலாவது பலப்பரீட்சையில் வெற்றியடைந்துள்ளது. அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை 57 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ☞ 2

## போராட்டச் செயற்பாட்டாளர் சி.ஐ.டியால் நேற்றுக் கைது!



பொலிஸ் தலைமையகத்துக்கு அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியம் மற்றும் கோட்டா கோ கமவின் செயற்பாட்டாளரான அந்தோனி வெரங்க புஷ்பிகா கொழும்பு தெற்கு பிரதேச குற்றப் புலனாய்வுப் ☞ 2

## பலாலி - சென்னை விமானம் சேவை 10ஆம் திகதி ஆரம்பம்


சென்னை - பலாலி - சென்னை விமான சேவை எதிர்வரும் பத்தாம் திகதி முதல் வாரத்திற்கு நான்கு நாள்கள் நடைபெறும் என்று சென்னையில் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் கடைசி வரை இந்த விமான சேவைக்கான வழித்தட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. காலக்கிரமத்தில் அது நீடிக்கப்படும்.

வாரத்தில் நான்கு நாள்களிலும் காலை 6 மணிக்கு சென்னையில் இருந்து புறப்படும் விமானம் 7 மணிக்கு பலாலி வந்து பின்னர் சென்னை திரும்பும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தல்தான் ஒரே வழி!

### அரசிடம் கஜேந்திரன் எம்.பி. இடித்துரைப்பு



பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் தேர்தலுக்குச் செல்லுங்கள். தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வாருங்கள். அப்போது நீங்களும் நாங்களும் சேர்ந்து நாட்டை அபிவிருத்தி செய்யலாம். ☞ 2

## ஐந்து நாள்களுக்குள் 2ஆம் தடவையாக ரணிலைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி சுங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பில் அமெரிக்கத் தூதுவரும், ஜனாதிபதி ஊடகப் பிரிவும் தகவல்களை வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே, காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்த ☞ 4

## எவருக்கும் சோரம் போகாமல் முதுகெலும்புடன் நிற்கிறோம்

### சபையில் செல்வம் எம்.பி. உரை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எவருக்கும் சோரம் போகாமல் முதுகெலும்புடன் செயற்படுகின்றோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு ☞ 2

## தமிழர்கள் அனுபவித்த அடக்குமுறைகளை இப்போது சிங்களவர்களும் உணர்கின்றனர்

### சபையில் சாணக்கியன் எம்.பி. எடுத்துரைப்பு



தமிழ் மக்கள் அனுபவித்த அரசின் அடக்குமுறைகளைத் தற்போது சிங்கள மக்களும் உணர்கின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து ☞ 2

## இரு மூத்த செயலாளர்களை மாகாணத்திற்கு வெளியே தூக்கிக் கடாசினார் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன்!

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தின் இரு மூத்த செயலாளர்களை மாகாணத்திற்கு வேண்டாம் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா அதிரடியாகக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கின் மூத்த செயலாளர்களான இ.இளங்கோவன் மற்றும் செந்தில்நந்தனன் ஆகியோருக்கே இவ்வாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2022.07.26 திகதியிடப்பட்டு நேற்று மதியம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது 2021.10.05 ஆம் திகதிய தங்களது கடிதத்திற்கு அமைய எனக் குறிப்பிடப்பட்டு வழங்கியுள்ள இந்தக் கடிதத்தில் எதிர் வரும் 2022.08.01 முதல் மாகாணத்தில் இருந்து அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர்களாக இருந்த இருவரும் இந்த ஆண்டின் ஜனவரி மாதமே தற்போதைய அமைச்சுகளிற்கு இடமாற்றப்பட்டனர். தற்போது மாகாணத்திற்கு வெளியில் தூக்கி எறியப்படுவதனால் இது ஏதும் பழிவாங்கும் செயலாக இருக்குமா என கேள்வி ☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
போல – அறியாதவர் போல – புரியாதவர் போல – காட்சி தருவார் சம்பந்தன். இது பொதுவாக என்று அல்ல, உள்கட்சிக் கூட்டங்களிலும் கூட. கட்சியின் மற்ற உறுப்பினர்கள் வெட்டி வீழ்த்துவார்கள். வாங்கித் தள்ளுவார்கள். ஒன்றும் கேட்காதவர் போல, கண்ணை மூடித் தியானிப்பவர் மாதிரி, தூங்குபவர் போன்று காட்சி தருவார் சம்பந்தன் ஐயா.

யாரும் பேச்சாளர்கள் தமது உரையில் சம்பந்தன் ஐயாவை இலக்கு வைத்து அடித்தால் போதும். அவர் தியானம் திடீரெனக் கலைந்து விடும். சடாரெனக் கண் விழித்து 'என்ன மாதிரி...? என்ன மாதிரி...? எப்படி? எப்படி?' – என்று வினா தொடுத்து விடயத்துக்குள் புகுவார்.

இதைத்தான் 'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என அடிக்கும் போக்கு' என்பர்.

இப்போதும் கூட பகிரங்க பொதுவெளியில், பொது ஊடகத்தில், சம்பந்தன் ஐயா கூட்டமைப்புத் தலைமையைத் துறந்து ஓய்வுபெற வேண்டிய காலம் வந்துவிட்டது என்று பங்காளி கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்ட கருத்து நேரடியாக சம்பந்தனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்.

அது குறித்துத் தாம் அறிந்திருக்கவில்லை, தமக்கு அந்தச் செய்தி தெரியவே தெரியாது என எங்கள் செய்தியாளருக்கு சம்பந்தன் ஐயா கூறினாராயினும், அதன் பின்னரோ அல்லது முன்னரோ அந்த பேட்டியின் பதிவை சம்பந்தன் ஒரு 'பிரேம்' கூட விடாமல் முழுமையாக காணொலியாகப் பார்த்தார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடிந்தது.

தனக்கு என்பதால் சுளகு படக்கு, படக்கு என அடிக்கத் தொடங்கிவிட்டது. தம்மை வீட்டுக்கு போகுமாறு பகிரங்க வெளியில் கருத்து வெளியிட்ட செல்வத்துக்கு எதிராக சம்பந்தன் வெகுவாக வியூகம் வகுக்கின்றார் என்று கேள்வி.

ஜனாதிபதித் தேர்வுக்கான தேர்தலுக்கு முதல்நாள் சம்பந்தன் வீட்டில் நடைபெற்ற கூட்டமைப்பு எம்.பிக்களின் கூட்டத்தில் பங்கு பற்றிய எம்.பிக்களில் ஒருவரை அழைத்து, சம்பந்தன் நேரடியாக விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றார். யாருடைய வாகனத்தில் அவர் கூட்டம் முடிந்து வீட்டுக்கு போனார், அவருக்கு வந்த அழைப்புகள், செல்வம் எம்.பி. குறித்தும், அவரது அன்றைய நடமாட்டம் குறித்தும், பிற சிங்கள, முஸ்லிம் தரப்புகள் இந்த எம்.பிக்குத் தெரிவித்த தகவல்கள், எல்லாவற்றையும் ஒரு துப்பறிவாளன் போலத் துருவித் துருவி சம்பந்தன் ஐயா கேட்டுத் தொகுத்து வைத்திருக்கிறார் என்று தெரிகின்றது.

இது விடயத்தில், ஐயாவுக்குப் பக்கத்தில் நிற்போரும் கனகச்சிதமாக உருவேற்றியும் விட்டிருப்பார்கள்.

உரிய சமயத்தில் உரு வந்தால், சுளகு படக்குப் படக்கு என அடிக்கும். ஏனென்றால் விடயம் தன்னை ஒட்டியது என்பதால்...!

– மின்னல் –

## போராட்டச் செயற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக காலிமுகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்த அவரை கோட்டைப் பகுதியில் வைத்து நீல நிற ஜீப் வாகனத்தில் வந்த இனந்தெரியாத குழுவினர் வலுக்கட்டாயமாக ஏற்றிச் சென்றனர் என்று சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அவர் கடத்தப்பட்ட செய்தியில் உண்மையில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் கொழும்பு தெற்கு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர் எனவும், அவர் கோட்டைப் பொலிஸாரால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கொழும்பு தெற்கு பிரிவு பொறுப்பதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

## தேர்தல்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
– இவ்வாறு அரசிடம் நேற்று இடித்துரைத்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகால ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது கஜேந்திரன் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,

39 ஆண்டுகளுக்கு முன்னர் தற்போதைய ஜனாதிபதி அன்று கல்வி அமைச்சராக இருந்தபோது அவரின் மாமனார் ஜனாதிபதியாக இருந்த வேளையில் சகல அதிகாரங்களையும் கைகளிலேயே வைத்துக் கொண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தமிழர்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு, மக்கள் கொல்லப்பட்டனர். இப்போது 39 வருடங்களாகியுள்ளன. அன்று உங்களின் காடையர்கள் எங்களின் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொடூரமாக நடந்துகொண்ட போது அதற்கு எதிராகச் செயற்பட்டவர்களைப் பயங்கரவாதிகள் என்றீர்கள். இதனை ஒடுக்க சட்டங்களை இயற்றி நடவடிக்கை எடுத்தீர்கள். அதன் விளைவு இன்றும் இருக்கின்றது.

தமிழருக்கு எதிராக நீட்டிய துப்பாக்கிகள் சிங்களவர்களுக்கு எதிராகவும் திரும்பும் என்று எங்களின் தலைவர் அன்று கூறியிருந்தார். இந்த நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. உங்களின் கைகளால் உங்களின் மக்களின் கண்களில் குத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், மக்கள் விரட்டியடிக்கப்படுவார்கள் என்ற அச்சத்தில் ஏதோவொரு வகையில் அந்தப் போராட்டங்களை ஒடுக்குவதற்காக இந்த அவசரகாலச் சட்டத்தைக் கையில் எடுத்துள்ளீர்கள். இது உங்களின் மக்களுக்கு எதிரான மோசமான இரத்த ஆற்றுக்கான வழியை ஏற்படுத்தும் என்பதனையும் கூறிக்கொள்கின்றோம்.

இந்த நாடாளுமன்றத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை. நீங்கள் தேர்தலுக்கு செல்வதன் ஊடாக மட்டுமே உங்களின் மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தி நாடாளுமன்றமாக இது இருக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கே மூன்றில் இரண்டு அதிகாரம் வழங்கப்பட்டது. அவரையே மக்கள் வெளியேறக் கூறிவிட்டார்கள். அப்படியென்றால் அவர்கள் உங்களின் அரசுக்கான ஆணையையே மீளப் பெற்றுவிட்டார்கள் என்றே கூற வேண்டும். இதனால் தொடர்ந்தும் அதிகாரத்தை வைத்துக்கொண்டு செயற்பட்டால் நீங்கள் பாசிச ஆட்சியையே செய்கின்றீர்கள். நாட்டுக்காகத்தான் பேசுகின்றீர்கள் என்றால் தேர்தலுக்குச் செல்லுங்கள். இல்லையென்றால் போராட்டக்காரர்கள் விரட்டி விரட்டியே கைதுசெய்யப்படுவார்கள்.

நாங்கள் போதியளவு அனுபவங்களைக் கொண்டுள்ளோம். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் மிக மோசமாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான கொடூரங்களை அனுபவித்துள்ளோம். அதற்காக சிங்களவர்களும் அதனை அனுபவிக்க வேண்டும் என்று கூறவில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் தேர்தலுக்குச் செல்லுங்கள். தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வாருங்கள். அப்போது நீங்களும் நாங்களும் சேர்ந்து நாட்டை அபிவிருத்தி செய்யலாம் – என்றார்.

## முதலாவது பலப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும், எதிராக 63 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதில் ஜனாதிபதியாகச் செயற்பட்டவேளை, கடந்த ஜூலை 17 ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தினார்.

அவசரகால நிலைமை பிரகடனப்படுத் தப்பட்டு, 14 நாள்களுக்குள் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படாவிட்டால் அது இரத்தாகிவிடும். எனவே, அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்தார். மாலை 5.25 மணிவரை இது தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

அதன்பின்னர் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீது எதிரணி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பைக் கோரினார். இலத்திரனியல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்தன. டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியும் எதிராகவே வாக்களித்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும், அரச பங்காளிக் கட்சிகளும் ஆதரித்து வாக்களித்தன. விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளடங்கலான சுயாதீன அணிகளும் ஆதரித்து வாக்களித்தன. இ.தொ.காவின் எம்.பிக்கள் இருவரும் ஆதரித்து வாக்களித்தனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருவர் ஆதரவாக வாக்களிக்க, ஏனையோர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

சபாநாயகர் தவிர்ந்து 41 எம்.பிக்கள் (ஆளும் மற்றும் எதிரணி) வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இரு மூத்த செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எழுப்பப்படுகின்றது.

இதேநேரம் ஆளுநரால் செயலாளர்களிற்கு அனுப்பிய கடிதம் தனிப்பட்ட இல்லங்களிற்கு முகவரியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, மாகாணத்தின சகல செயலாளர்களிற்கும் சகல பிரதிப் பிரதம செயலாளர்களிற்கும் பிரதியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இடமாற்றப்படும் இரு செயலாளர்களான உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரான இ.இளங்கோவனின் இடத்திற்கு பதில் கடமையாக உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார். இதேநேரம் மாகாண சபை செயலாளர் செந்தில்நந்தனன் இடத்திற்கு குகநாதன் பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று மாகாண விவசாய அமைச்சின் பணிப்பாளர் சிவமோகன் மற்றும் மாகாண கட்டடத் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரும் அப்பதவிகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## எவருக்கும் சோரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக வழியிலான போராட்டங்களை ஒடுக்கக்கூடாது. அவ்வாறு ஒடுக்க முற்பட்டதால்தான் இந்நாட்டில் ஆயுதப் போராட்டம்கூட ஏற்பட்டது. அந்த வகையில் அவசரகாலச் சட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சோரம் போய்விட்டது எனச் சில புல்லுருவிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். கூட்டமைப்பு ஒருபோதும் சோரம் போகாது. நாங்கள் முதுகெலும்புடன் செயற்படுகின்றோம் – என்றார்.

## தமிழர்கள் அனுபவித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெளியிட்ட அவர்,

இலங்கை அரசியல் வரலாற்றில் தவறுகளைத் திருத்திக்கொள்ள அரசியல் தலைவர்களுக்குப் பல சந்தர்ப்பம் கிடைத்தபோதும் அவர்கள் அவற்றை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அதுவும் ஒரு காரணியாகக் காணப்படுகின்றது.

தற்போதைய அரச தலைவர்கள் வரலாற்று ரீதியிலான தவறைத் திருத்திக் கொண்டு பொருளாதார முன்னேற்றம் குறித்து அவதானம் செலுத்த வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருமித்த வகையில் தீர்வு காண முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விசேட பொருளாதார வலயங்களை ஸ்தாபித்தால் புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளைச் சிறந்த முறையில் எம்மால் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கு அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முறையான தீர்வு அவசியம்.

காணாமல் ஆக்கபட்டோர் விவகாரம், சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு உட்பட அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து அரச தலைவர்கள் விசேட அவதானம் செலுத்த வேண்டும்.

போராட்டத்தில் ஈடுப்பட்ட இளைஞர்கள் தற்போது கைதுசெய்யப்படுகின்றார்கள். சிறந்த மாற்றத்துக்கான போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களையும், போராட்டத்தில் ஈடுபடுபவர்களையும் கைதுசெய்வதை விடுத்து மத்திய வங்கியைக் கொள்ளையடித்தவர்கள், சீனிவரி ஊடாக கொள்ளையடித்தவர்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கும் தீ வைத்தவர்களைக் கைதுசெய்ய அவதானம் செலுத்துங்கள்.

அவசரகாலச் சட்டம், கைது ஆகியவை தமிழ் மக்களுக்கு ஒன்றும் புதியவையல்ல. போராட்டத்தில் ஈடுபடுபவர்களைச் சட்டத்தின் ஊடாக அடக்குவதை விடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு அவதானம் செலுத்த வேண்டும்.

அரசமைப்பு ரீதியிலான மாற்றத்தையே போராட்டகாரர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அவற்றைச் செயற்படுத்த அரசு ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும் – என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணில் அரசின் ஸ்திரம்

**நாடாளுமன்றத்தில் ரணிலின் அரசு தனது ஸ்திர நிலை என்னவென்பதை நேற்று அவசர கால சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பலப்பரீட்சையில் நிரூபித்து விட்டது.**

**இந்த யதார்த்தப் புறநிலையை கருத்தில் வைத்துக் கொண்டுதான் ரணில் அரசுக்கு எதிரான தங்களது சாம, பேத, தான, தண்ட அணுகல் முறைகளை எதிரணிகள் இனி முன்னெடுக்க வேண்டியிருக்கும்.**

**கோட்டாய ராஜபக்ஷவும் கடந்த 14ஆம் திகதி ஜனாதிபதிப் பதவியைத் துறப்பதற்கு முன்னர், இந்த ஆண்டில் இரண்டு தடவைகள் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்.**

**ஆனால் அவை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வரவுமில்லை, வாக்கெடுப்புக்கு விடப்படவுமில்லை. நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்காமலேயே – மக்கள் பிரதிநிதித்துவத்தை எதிர்கொள்ளாமலேயே – அதற்குத் திராணியில்லாமலேயே – இந்த அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, பதினான்கு நாள்களில் அது தானாகவே காலாவதியாகும் தந்திரோபாயத்தை கோட்டா ஆட்சிப் பீடம் கைக்கொள்கின்றது என்று அதையொட்டி அப்போது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியிருந்தார்.**

**ஆனால் ரணில் அப்படிச் செயற்படவில்லை. தான் அதிகாரத்துக்கு வந்ததும், எழுந்திருந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காக வந்த உடனேயே அவரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தார். அதைக் கால தாமதப்படுத்தாமல், நாடாளுமன்றைக் கூட்டி, அதன் முன் சமர்ப்பித்து, நாடாளுமன்ற அனுமதியையும் பெற்றிருக்கின்றார்.**

**அவசரகாலச் சட்ட விதிகளுக்கு ஆதரவாக – ரணில் அரசின் நடவடிக்கையை அங்கீகரித்து – 120 எம்.பிக்களும், எதிர்த்து 63 எம்.பிக்களும் வாக்களித்திருக்கின்றனர். சபாநாயகர் உட்பட 41 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.**

**இந்த வாக்கெடுப்பில் ரணில் அரசுக்கு ஒரு 'செக் மேட்' வைக்க எதிரணி திட்டமிட்டதாயினும், நாடாளுமன்ற ஆசனங்களின் அட்சரகணித எண்ணிக்கையில் தமது நிலைமை என்ன, ரணில் அரசின் பலம் என்ன, பலவீனம் யாது என்பதை நேற்றைய நாடாளுமன்ற வாக்கெடுப்பு இரு தரப்பினருக்கும் நன்கு உணர்த்தியிருக்கும் என்பது தெளிவு.**

**மொட்டுக் கட்சியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த நாடாளுமன்றம், மக்கள் ஆணையை – செல்வாக்கை – இழந்து விட்டது என்ற சுமந்திரன் தரப்பினரின் வாதத்தை ஒரு கோசமாக வைத்துக் கொண்டு, இந்த நாடாளுமன்றத்தை எவ்வளவு தூரம் சாதகமாகக் கையாளலாம் அல்லது 'அறகலிய' போன்ற போராட்டங்களை நாடாளுமன்றத்துக்கு எதிராக உசுப்பேற்றி விட்டு விடயங்களைக் கையாளலாம் என்பதை எதிரணித் தலைவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.**

**எது, எப்படியோ முதல் சுற்றில் – முதல் ரவுண்டில் – தனது உறுதியான நிலையை – ஸ்திரத்தை – ரணிலின் அரசு நிலைநிறுத்திக் கொண்டு விட்டது என்பதுதான் களயதார்த்தம்.**

**சர்வகட்சி அரசு அமைப்பதற்கு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கக் கூடிய அழைப்பையும் கூட, நாடாளுமன்றத்தின் இந்தப் பின்புல எண்ணிக்கைப் பலத்தைக் கவனத்தில் வைத்துக் கொண்டுதான் எதிர்க்கட்சிகள் ஊடாட வேண்டியிருக்கும்.**

**நாடு எதிர்கொள்ளும் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு சர்வகட்சி அரசு அவசியமானதே. அந்தத் கருத்தியலில் அதனை அணுகாமல் தனிப்பட்ட அரசியலுக்கான பலப்பரீட்சையாக அதனை எதிரணிக்கட்சிகள் அணுகுமானால் அது நாட்டுக்குப் பெரும் பின்னடைவாகும்.**

# மேற்குலகின் ஆதரவை ரணில் இழந்துவிட்டார்!

### ராஜித சுட்டிக்காட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஆதரவளித்து வந்த மேற்குலக நாடுகள், கடந்த வாரம் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் அவர் மீது அதிருப்தியடைந்துள்ளன.

இதனால் இலங்கைக்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்த சர்வதேச உதவிகள் கேள்விக்குள்ளாகியுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

முழு நாடும் பொதுஜன பெரமுனவிற்கு எதிரான நிலைப்பாட்டிலேயே உள்ளது. மக்களின் அந்த நிலைப்பாட்டை வெற்றி பெறச் செய்வதற்காகவே நாம் நாடாளுமன்றத்தில் முயன்றோம்.

எனினும் பொதுஜன பெரமுனவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்துமது சுக போகங்களுக்காக ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளித்தனர்.

இவ்வாறு வெற்றி பெற்ற ஒரு ரணில் விக்கிரமசிங்கவின் முதலாவது நடவடிக்கை அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் ஆகும்.

இதன் காரணமாக எந்த சந்தர்ப்பத்திலும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்த மேற்குலக நாடுகள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தின. அத்தோடு சர்வதேச நாணய நிதியமும் இலங்கையுடனான ஒப்பந்தத்தை ஒத்தி வைத்துள்ளது.

உலகவங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளிடமிருந்து எதிர்பார்க்கும் உதவிகளும் கைநழுவி போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. பிறிதொரு நபரின் மூலம் ராஜபக்ஷ யுகம் மீண்டும் இலங்கையில் ஆரம்பித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. இன்று மேற்குலக நாடுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இல்லை.

நாட்டில் தற்போது உள்ள நிலைமையில் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது அத்தியாவசியமானதாகும். ஆனால் அது மக்களின் நிலைப்பாட்டுக்கு ஏற்றதாக அமைய வேண்டும்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்ட போதிலும் நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இன்னும் நிறைவிற்கு வரவில்லை. இந்த அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை ஏற்பதற்கான அழைப்புகள் எமக்கும் வருகின்றன. ஆனால் எம்மில் எவரும் அதனை பொறுப்பேற்கத் தயாராக இல்லை. – என்றார்.

# மக்கள் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும்

### சம்பிக்க கோரிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து தேர் தலை நடத்த அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக் கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தான் ஒரு நாமநிர்வாகியான ஜனநாயகவாதி என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிப்படுத்தியுள்ளார். காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு தரப்பினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியாயப்படுத்துகிறார்.

மக்களின் ஜனநாயக போராட்டத்தை அதிகாரத்தைக் கொண்டு அடக்கினால் அதன் எதிர்விளைவு மிக பாரதூரமானதாக அமையும். நாட்டு மக்கள் அரசியல் கட்டமைப்பை முழுமையாக வெறுக்கிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், அவர் தலைமையிலான அரசாங்கத்தையும் நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை நிலையாகப் பேணப்பட வேண்டுமாயின் அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

ஆகவே தேர்தல் ஒன்றின் ஊடாக சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். நாட்டு மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளித்து தேர்தலை நடத்த அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அரசாங்கம் பேச்சளவில் மாத்திரம் கொள்கைத் திட்டங்களை குறிப்பிடுகிறதே தவிர, செயற்பாட்டுரீதியில் எதனையும் செயற்படுத்தவில்லை.

எதிர்வரும் காலங்களில் எரிபொருள் கொள்வனவு நிச்சயமற்றது என மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளமை உண்மையானதே. – என்றார்.

# பணிப்பெண்ணின் சிசுவை கொன்ற வைத்தியர் கைது

தனது வீட்டுப் பணிப்பெண் பிரசவித்த சிசுவைக் கொன்று சடலத்தை கிணற்றில் வீசிய குற்றச்சாட்டில் வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு மட்டக்களப்பில் கிணற்றொன்றில் சிசுவின் சடலம் கண்டெடுக்கப் பட்டிருந்தது. அது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸாரின் நீண்ட விசாரணையின் பின்னர், சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த வைத்தியர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய வைத்தியர் சம்பவத்தின்போது மட்டக்களப்பு பகுதியில் வாடகை வீடொன்றில் தனது மனைவியுடன் வசித்து வந்தார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வைத்தியரின் வீட்டில் பணிபுரிந்த பெண் பிரசவித்த சிசுவை மூச்சுத் திணறடித்து கொன்றார் என இந்த வைத்தியர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சந்தேக நபர் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

---

## ஐந்து நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டக்காரர்கள் கடந்த 22ஆம் திகதி அதிகாலை படையினரால் தாக்கப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர், அன்று பிற்பகல் அமெரிக்கத் தூதுவர் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்திருந்தார்.

இந்நிலையில், 5 நாட்களுக்குள் நேற்று இரண்டாவது தடவையாக ஜனாதிபதி ரணிலைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நிலவும் உறவுகளை வலுவான அணுகுமுறையின் மூலம் முன்னெடுத்துச் செல்வது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

புதிய அரசின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமெரிக்கத் தூதுவர் உறுதியளித்தார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம்-75

**புரியாமையும் புரிதலுக்கான தயக்கமும்**

1986 ஆம் ஆண்டு காலத்தில் இருந்து தமிழர் விடுதலைப் போராட்டத்தில் ஆஸ்திரேலியாவும் – முக்கியமாக மெல்போ



குணதாஸ அமரசேகர

னும் – கேந்திர மையமாக இருந்த நாள்களில் நான், முருகபூபதி, நடேசன் போன்றோர் மாற்று சிந்தனைக்காக 'உதயம்' பத்திரிகையில் பேட்டிகளும் போபகேயின் உரையாடல்களையும் நடத்தி இருந்தோம்.

பெரும்பாலான தமிழ் மக்களுக்காக அவரது உரையை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் சங்கங்களிடம் அவற்றை நடத்த கோரி வினவிய போது அவை மறுக்கப்பட்டன.

1977 ஆண்டு காலத்திலும், பின்னரும் கூட, முன் உணர்வுகளால் ஆக்கப்பட்ட அல்லது உத்தரவுகளினால் ஏற்படுத்தப்பட்ட, கருத்தாக்கங்களால்தான் இவை நடக்கின்றன என்பதால் அந்த அறியாமையை அகற்ற சங்கத்தின் போஷகராக தலைமையில் இருந்த திரு. எலியேசரிடம் போபகே 1977 இல் வெளியிட்ட 'தேசிய இனப் பிரச்சினைக்கான ஒரு மார்க்சியவாதியின் பார்வை' என்ற கட்டுரையையும், அவர் ஜே.வி.பியை விட்டு விலகிய போது எழுதிய கடிதத்தின் பிரதியையும் கொடுத்து, அவற்றை வாசித்து, அதனை தமிழ் மக்களின் ஆதரவுக்காக மக்களுக்கு போபகே மூலம் தரலாம் என அறிவுறுத்தினேன்.

பின்னர் திரு.எலியேசர் தான் அவற்றைப் படித்து, இவை எப்போவோ செய்யப்பட்டிருக்க வேண்டும் என அபிப்பிராயப்பட்டாலும், விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்களாக இவற்றை இப்பொழுது வரவேற்க மாட்டார்கள் எனக் கருதி தவிர்த்து விட்டார்.

பின்னாளில் போர் முடிந்த கால கட்டங்களில் அவர்களால் போபகே அழைத்து மேடையற்றப்பட்டார்.

புரிந்து கொள்ள விரும்பாமையும், புரிந்து கொள்ள மறுப்பதும்தான் பிரச்சினைகளின் அடிமூலல் காரணங்கள்.

காலிமுகத் திடல் போராட்டத்திற்கு வந்தவர்கள் தொழில் விற்பனர்கள், படித்த இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பெரும் வியாபார நிலையங்களில் முகவர்கள், தேசிய அளவில் அந்தஸ்து பெற்ற விளையாட்டு வீரர்கள், நடிகர்கள், நடிகைகள் போன்றவர்கள். அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்திய விதங்களில் வன்முறையற்ற, சட்டத்துக்கு அமைவான நோக்கங்களும் கொள்கைகளும் அவற்றை அமல்படுத்தும் திட்டங்களும் இருந்தன. நாட்டின் எல்லாவித மக்களுக்கும் பயன் தரக் கூடியவையாக அவை காணப்பட்டமையால் மிக விரைவில் சமூக அங்கீகாரமும் சர்வதேச ஆதரவையும் போராட்டம் பெற்றது. அவர்கள் கோரியயது நல்லாட்சி. நாடு முறையாக நிர்வகிக்கத் தேவையான அரசியல் கட்டமைப்பின் மாற்றங்கள். அவற்றில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற ஒன்று இணைக்கப்படவில்லை. பெரும்பான்மை மக்களின் சிந்தனைகளில் அவை உடனடியானதும் அவசர தேவையானதாகவும் தோற்றப்படவில்லைப் போலும். அவர்களுக்கு அத்தியாவசிய தேவைகள் முன்னின்றன.

சிங்கள மக்களின் போராட்டங்களையும், தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அணுகுமுறைகள் பற்றியும் எழுதும்போது அவர்கள் தீவிர புத்திஜீவி குணாதாச அமரசேகரதாம் 1977 ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் தான் முதன் முறையாக சிங்கள மக்கள் எல்லாவற்றிற்கும் மேலாக உணவு, தண்ணீர், உடுபுடைவைகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்தார்கள், இவற்றை அரசியல் கட்சிகளும் அறிந்து அவற்றையே அவர்களுக்கு கொடுத்து வந்தன என எழுதினார்.

அவர் குறிப்பிட்டது 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நாடு பிரிவினையை எதிர் நோக்கிய போதும் கூட, அதனை முக்கியமாக வைத்து சிங்கள மக்களை உசுப்பிப் போர்க்குணம் கொள்ள வைத்து, அரசமைத்து அதை அடக்குவதற்கு வழிதேடாமல், உணவிற்கும் தண்ணீருக்கும் உடுபுடைவைகளுக்கும் சிங்கள மக்கள் அலைந்ததும் அரசியல் கட்சிகள் அவற்றுக்கு முக்கியத்துவம் தந்ததையும்தான்.

இன்னொரு விதத்தில் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் போது கட்சி அங்கத்தினர்களை வழிக்கு கொண்டு வந்து ஆதரவு பெற அப்பொழுது நிதி அமைச்சராக இருந்த றொனி டி மெல் ஆதரவு தந்து ஒப்பந்தம் நிறைவேறி, விடுதலைப் போராளிகளின் நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படா விட்டால், அடுத்த வரவு – செலவுத் திட்டத்தில் தான் மக்களுக்கு எதிரான பல சிக்கன நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டி வரும், அவை உங்களுக்கு சாதகமாக இருக்கா, மக்கள் அவற்றை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற பயத்தைத்தான் ஆளும் தரப்பு எம்.பிக்களுக்கு விதைத்தார்.

அப்படிப் பயத்தை விதைத்தாரே ஒழிய புரையோடிக் கொண்டிருக்கும் இந்த இனப்பிரச்சினைக்கு இப்போதாவது ஒரு தீர்வு மூன்றாம் தரப்பால் வருகிறது, இது நாட்டுக்கு நன்மையானது என்ற அணுகுமுறையாக இருக்கவில்லை. மக்களின் தரவுகளை – மக்களுக்கு வழங்கப்படுபவற்றை – குறைத்தால் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், அது உங்களது பதவிகளுக்கு இடைஞ்சலாக முடியலாம் என்ற 'கரட்டும் கம்புமான' செயல்முறைகள்தான் நடந்தன.

காலிமுகத்திடல் எழுச்சியும் அப்படியானதுதான். அதில் ஊழல்கள் நிறைந்த அரசியல்வாதிகளை துரத்த வேண்டும் என்ற கோபமும் கொதிப்பும் கொழுந்து விட்டு எரிந்தது.

ஆக, தமிழ் மக்கள் உரிமைகள் கோரி, சத்தியாகிரகம், அடக்குமுறைகள்



றொனி டி மெல்

பின்னர், அத்தியாவசியப் பொருள்களின் தடைகளைத் தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் என அனுபவித்து வாடி வதங்கியபோது நாட்டில் சிங்கள தேசத்தில் வசதியான வாழ்வுமுறையே நடந்தது. அந்த வசதிக்கான குறைகள் வந்ததும்தான் காலி முகத் திடலில் மக்கள் கொதித்தெழுந்து பங்கு பற்றி ஆதரவு தந்தார்கள்.

அதேபோல் நாட்டின் மற்றைய பகுதிகளில் வாழ்வாதாரத்துக்கான அத்தியாவசிய தேவைகள் வெட்டி விடப்பட்டாலும், தமிழ் பகுதிகளையும் அவை பாதித்தாலும், அவர்கள் வழமையான வாழ்வு முறையை தொடர்ந்தார்கள். கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் மசூதிகளில் திருவிழாக்களும் அன்னதானங்களும் பெருவாரியான மக்கள் பங்குபற்ற நடந்து வருகின்றமையைப் பத்திரிகைகளில் படங்களோடு பார்க்க முடிகின்றது. இவை எந்தப் புரிதலை வெளிப்படுத்துகின்றன? அவற்றை மக்களிடமே விட்டுவிட்டு, ஜே.வி.பியின் இனப் பிரச்சினைக்கான நிலைப்பாட்டுக்கு அவர்களுக்குள் நடந்த வாதப்பிரதிவாதங்களை இனிப் பார்ப்போம்.

(வளரும்)



# போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அடக்குவதை விடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுக!

## நாடாளுமன்றில் சாணக்கியன் காட்டம்



போராட்டத்தில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் ஊடாக அடக்குவதை விடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இலங்கை அரசியல் வரலாற்றில் தவறுகளைத் திருத்திக்கொள்ள அரசியல் தலைவர்களுக்கு பல சந்தர்ப்பம் கிடைத்த போதும் அவர்கள் அவற்றை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அதுவும் ஒரு காரணியாகக் காணப்படுகிறது.

தற்போதைய அரச தலைவர்கள் வரலாற்று ரீதியிலான தவறைத் திருத்திக்கொண்டு பொருளாதார முன்னேற்றம் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருமித்த வகையில் தீர்வு காண முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விசேட பொருளாதார வலயங்களை ஸ்தாபித்தால் புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளை சிறந்த முறையில் எம்மால் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கு அடிப்படை பிரச்சினைகளுக்கு முறையான தீர்வு அவசியம்.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு உட்பட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அரச தலைவர்கள் விசேட அவதானம் செலுத்த வேண்டும்.

போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தற்போது கைது செய்யப்படுகிறார்கள். சிறந்த மாற்றத்துக்கான போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும், போராட்டத்தில் ஈடுபடுபவர்களையும் கைது செய்வதை விடுத்து மத்திய வங்கியை கொள்கையடித்தவர்கள், சீனி வரி ஊடாக கொள்ளையடித்தவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கும் தீ வைத்தவர்களைக் கைது செய்ய அவதானம் செலுத்துங்கள்.

அவசரகால சட்டம், கைது, ஆகியவை தமிழ் மக்களுக்கு ஒன்றும் புதியனவல்ல, போராட்டத்தில் ஈடுபடுபவர்களைச் சட்டத்தின் ஊடாக அடக்குவதை விடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

அரசமைப்பு ரீதியிலான மாற்றத்தையே போராட்டக்காரர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவற்றை செயற்படுத்த அரசாங்கம் ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

## அரசின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாம் அமெரிக்கா!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த தூதுவர், அவருடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நிலவும் உறவுகளை வலுவான அணுகுமுறையின் மூலம் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமெரிக்க தூதுவர் உறுதியளித்துள்ளார்.

## தீர்க்கமான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் இலங்கை தொடர்பில் அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

தற்போதைய நெருக்கடி நிலையில் இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்க தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளது.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிபுணர்கள் மற்றும் கொள்கை நிபுணர்களுடனான விசேட சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் அமெரிக்கத் தூதுவர் விளக்கமளித்துள்ளார். பொருளாதார ஸ்திரத் தன்மையை மீட்டெடுக்கவும் இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தீர்க்கமான நடவடிக்கை அவசியம் என்றும் அவர் கூறினார்.

முன்னோக்கி செல்லும் பாதை மற்றும் பரந்த அடிப்படையிலான, நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தத் தேவையான அவசர சீர்திருத்தங்கள் தொடர்பாக இதன்போது விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

## சிறுபோக அறுவடைக்கான டீசல் விநியோகம் வவுனியாவில் தொடர்ச்சியாக முன்னெடுப்பு!

வவுனியாவில் சிறுபோக நெல் அறுவடைக்குரிய டீசலை கட்டம் கட்டமாக வழங்கும் செயற்பாடு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 12 ஆயிரத்து 238 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஜூலை முதல் கிழமையில் இருந்து ஒகஸ்ட் கடைசிக் கிழமை வரை சிறுபோக நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

சிறு போகத்துக்குரிய டீசலை வாராந்தம் பகிர்ந்து வழங்குவதற்குரிய நடவடிக்கையை மாவட்ட அரசாங்க அதிபர் சரத்சந்திரவின் வழிகாட்டலின் பேரில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் நே.விஸ்னுதாஸனின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் தற்போது வரையான காலப் பகுதியில் 6,040 ஏக்கரிற்குரிய 61 ஆயிரத்து 156.25 லீற்றர் டீசல், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 08 கமநல சேவை நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மீதமாக உள்ள 6 ஆயிரத்து 198 ஏக்கரிற்குரிய டீசலை விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் முன்னெடுக் கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தேவையான மருந்துப் பொருள்களை தட்டுப்பாடு இன்றி வழங்கப் பணிப்பு!

மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்களை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கான செயற்திட்டத்தை முறைப்படி முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். மருந்து இறக்குமதியை நிர்வகிப்பது தொடர்பில் சுகாதார திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் மருந்து உற்பத்தியை விரைவுபடுத்துவதற்குத் தேவையான மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதால், அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி அதற்கான நடைமுறைகளைத் தயாரிக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். உலக வங்கியால் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 2 கோடியே 30 லட்சம் டொலர்களில் இதுவரை ஒரு கோடியே 86லட்சம் டொலர்கள் பெறப்பட்டுள்ளமை இந்த கலந்துரையாடலின் போது தெரியவந்துள்ளது.

## குறைக்கப்படுகின்றது எரிபொருளின் விலை?

எதிர்காலத்தில் எரிபொருள் விலை குறைவடையக்கூடும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் தற்போதைய விலை நிலைவரத்தின் படி எதிர்காலத்தில் எரிபொருள் விலை மேலும் குறைவடையும் வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், அடுத்த எரிபொருள் விலைத் திருத்தத்தின் மூலம் எரிபொருள் விலை குறையக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் எரிபொருள் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15ஆம் திகதிகளில் எரிபொருள்களின் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எரிபொருள்களுக்கான விலைகள் குறைக்கப்படுமாக இருந்தால், அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளும் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொமன்வெல்த் கூடைப்பந்து போட்டிக்கு யாழில் வீரர் தெரிவு!




கொமன்வெல்த் கூடைப்பந்து போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வடமாகாணத்தில் இருந்து முதன் முறையாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகநாதன் சிம்ரோன் என்ற 22 வயதுடைய இளைஞர் கலந்து கொள்கிறார்.

சிறுவயதில் இருந்து கூடைப்பந்து விளையாட்டில் ஆர்வமுடைய இந்த இளைஞர் பல்வேறுபட்ட போட்டிகளில் கலந்து கொண்டுள்ளதுடன் இலங்கையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணியின் பிரதித் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை தற்போதுதான் முதன்முறை போட்டியிடுவதாகவும், அதில் கலந்து கொள்ளும் முதலாவது தமிழ் இளைஞன் இவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஐந்து வருடமாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருவதுடன், மட்டக்களப்பில் நடத்தப்பட்ட தேசிய போட்டிகளில் வெற்றியையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். மேற்படி இளைஞர், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் கல்விகற்றதுடன் இவருக்கான பயிற்சியாளராக ஆரம்பம் முதல் ஜெயபாலன் ஜெசந்தன் செயற்பட்டு வருகிறார்.

# சர்வகட்சி அரசு குறித்து பேச்சுகள் இல்லையாம்!

## பிரதான கட்சிகள் கவலை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இருவார காலத்துக்குள் சர்வக்கட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இதுவரை பிரதான அரசியல் கட்சிகளிடம் எவ்வித பேச்சுகளும் முன்னெடுக்கப்படவில்லை என கட்சிகள் குறிப்பிடுகின்றன.

பிரதான அரசியல் கட்சிகள் சர்வக்கட்சி அரசாங்கத்தில் இணைய நிபந்தனையின் அடிப்படையில் மறுப்பு தெரிவித்துள்ள நிலையில் கட்சிகளின் உறுப்பினர்கள் எவ்வழியிலாவது அரசாங்கத்தில் ஒன்றிணைந்து அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்வார்கள் என மக்கள் விடுதலை முன்னணி தவிர ஏனைய அரசியல் கட்சிகளின் முக்கிய தரப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**ஐக்கிய மக்கள் சக்தி**

சர்வக்கட்சி அரசாங்கம் தொடர்பில் கட்சி மட்டத்தில் பேச்சு முன்னெடுக்கப்படுகிறது. முன்வைக்கப்படும் யோசனைகளுக்கமைய சர்வக்கட்சி அரசாங்கத்தின் கட்டமைப்பு காணப்பட்டால் ஆதரவு வழங்கத் தயார். 06 மாத காலத்துக்கு பின்னர் தேர்தலுக்கு நிச்சயம் செல்ல வேண்டும் என்பது எமது பிரதான யோசனையாக அமையும் என ஐக்கிய மக்க்ள சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். சர்வக்கட்சி அரசாங்கத்தில் அரசியல் கட்சிகள் ஒன்றிணையாவிடின் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமே ஸ்தாபிக்கப்படும்.

பொருளாதார,சமூகமற்றும்அரசியல்நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக கட்சி என்ற ரீதியில் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளோம்.பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதன் பின்னர் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாக உள்ளது என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

**மக்கள் விடுதலை முன்னணி**

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்படும் சர்வக்கட்சி அரசாங்கத்தின் பதவி காலம் 06 மாத காலத்துக்கு வரையறுக்கப்பட்டதாகக் காணப்பட வேண்டும். அரசாங்கத்தின் பதவிக் காலம் தொடர்பிலும், பதவி காலத்துக்குள் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டம் தொடர்பிலும் அரசாங்கம் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

06 மாத காலத்துக்குப் பின்னர் அரசாங்கம் தேர்தலுக்கு செல்லும் என ஒருபோதும் நம்பிக்கை கொள்ள முடியாது. நாடாளுமன்றின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் பொதுத்தேர்தலுக்கு செல்ல வேண்டுமாயின் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். தற்போதைய நிலையில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பிற்கு முக்கியத்துவமளித்து பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைக் கலைக்க ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை. இடைப்பட்ட காலத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் பலருக்கு ஓய்வூதியம் இரத்தாகும் என பலர் தற்போதே யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டார். அதற்கு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் இடமளிக்கமாட்டர்கள். மக்களின் கோரிக்கைக்கமைய ஜனாதிபதி செயற்படப்போவதில்லை. ஏனெனில் அவர் மக்கள் பிரதிநிதியல்லர், பொதுஜன பெரமுனவின் பிரதிநிதி என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி**

சர்வக்கட்சி என்பதொன்று ஸ்தாபிக்கப்படுமாயின் அமைச்சுக்களின் எண்ணிக்கை 15 ஆக வரையறுக்கபட வேண்டும். அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் இராஜாங்க அமைச்சு, பிரதி அமைச்சு ஆகியவற்றை வழங்குவதை தற்காலிகமாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதி நெருக்கடி தீவிரமடைந்து நாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்க்கொண்டுள்ள நிலையில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களை 70 வரை நீடிப்பது வீண் செலவாக அமைவதுடன்,அரசியல் கட்டமைப்பு மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பை மேலும் தீவிரப்படுத்தும்.

சர்வக்கட்சி அரசாங்கம் தொடர்பில் அரசாங்கம் இதுவரை பேச்சை முன்னெடுக்கவில்லை. பேச்சுக்கு அழைப்பு விடுத்தால், அமைச்சரவையின் எண்ணிக்கை 15ஆக வரையறுக்கப்படல் வேண்டும். பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் அவசியமற்றவை அத்துடன் வெகுவிரைவில் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்துவோம் என சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் றோஹண லக்ஷ்மன் பியதா தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் ஊடாக மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஒருவர் அரசியல் டீல் ஊடாக நாட்டின் முதல் குடிமகனாக பதவி வகிப்பது முற்றிலும் மக்களாணைக்கு விரோதமானது ஆகவே வெகுவிரைவில் தேர்தலுக்கு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

**சுயாதீன தரப்பினர்**

அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்வதற்காக சர்வக்கட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்ள வேண்டிய தேவையில்லை. சர்வக்கட்சி அரசாங்கத்தின் கட்டமைப்பு,பதவிக் காலம் தொடர்பில் இதுவரை அரசாங்கம் எவ்வித பேச்சுகளையும் முன்னெடுக்கவில்லை. நாட்டு மக்கள் தேர்தலை கோரி நிற்கின்ற நிலையில் அரசியல்வாதிகளை திருப்திப்படுத்தும் வகையில் சர்வக்கட்சி அரசாங்கம் என்ற பெயரில் அமைச்சு பதவிகளை வழங்குவது முற்றிலும் தவறானது.

தேர்தல் ஒன்று இடம்பெறும் வரை இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் அது ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்தை வரையறுத்ததாகக் காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். சர்வக்கட்சி அரசாங்கம் தொடர்பில் அரசாங்கம் எம்முடன் எவ்வித பேச்சுகளையும் முன்னெடுக்கவில்லை என நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 10 அரசியல் கட்சிகளின் உறுப்பினர் சார்பில் வீரசிங்க வீரசுமன தெரிவித்தார்.

# 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆடை ஏற்றுமதி வருவாய் முன்னேற்றம்

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டு மே மாதத்தில் ஆடை ஏற்றுமதி வருமானம் 446 டொலராக அதிகரித்துள்ளது. இது நூற்றுக்கு 30 சதவீத அதிகரிப்பாகும். இந்த முன்னேற்றத்தை கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் பாராட்டியுள்ளது.

நாட்டின் ஆடைத் துறை முன்னெப்போதுமில்லாத சவால்களை எதிர்கொண்டு அதன் இலக்குகளை அடைவதில் தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்கி வருவதையும் கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் பாராட்டியுள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்சுமார்6வீதம்பங்களிப்பதோடு அனைத்து ஏற்றுமதிகளில் ஏறக்குறைய பாதி பங்களிப்பை வழங்குவதால், ஆடைத் தொழில் தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைகிறது. ஆற்றல் வழங்கல் மற்றும் உற்பத்திப் பொருள் நடவடிக்கைகளில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக தொழில்துறை தொடர்ந்து குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்வதால், துறையின் ஏற்றுமதி வருவாய் கடந்த மே மாதத்திற்குள் 16 முதல் 22 சதவீதம் வரை உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த கூட்டு ஆடை சங்கங்களின் மன்ற பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ், '2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தொழில்துறையின் இலக்கான 60 லட்சம் அமெரிக்க டொலர்களை எட்டுவோம் என்று நம்புகிறோம். எவ்வாறாயினும் முதலில் கடக்க வேண்டிய குறிப்பிடத்தக்க சவால்கள் உள்ளன என்பதை நாங்கள் நன்கு அறிவோம். எனவே தொழில்துறையில் செயல்பாடுகளின் தொடர்ச்சிக்கு சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்குவது முக்கியம்.

பெரிய ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியைத் தக்கவைத்துக்கொள்வதை உறுதிசெய்வதைத் தவிர அன்றாட நடவடிக்கைகளில் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் தொழில்துறையின் முக்கியப் பிரிவான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்களுக்கான ஆதரவிற்கு முன்னுரிமை அளிப்பது அவசியம் எனத் தெரிவித்தார்.

நாடு தற்போது எதிர்கொள்ளும் முன்னெப்போதும் இல்லாத நிச்சயமற்ற நிலை, ஸ்திரமற்ற உலகளாவிய சந்தை நிலைமைகள் மற்றும் அதிகரித்து வரும் மூலப்பொருள்கள் மற்றும் உற்பத்திக்கான செலவுகள் போன்றவற்றுக்கு மத்தியிலும், இலங்கையின் ஆடைத் தொழில்துறை தேசிய பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு மத்தியிலும் ஏற்றுமதி செயல்திறனில் உள்ள உயர் போக்குகள் ஜூன் வரை ஆண்டுக்கு ஆண்டு 17 வீத வளர்ச்சியைப் பதிவு செய்தல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தொடர்ச்சியான வரவு காரணமாக இலங்கையில் ஆடைகள் தொடர்பான நேர்மறையான அணுகுமுறை இன்னும் நாட்டிற்குள் காணப்படுகின்றது. 9 கோடியே 40 லட்சம் டொலர் ஆடை முதலீட்டில், 2022ஆம் ஆண்டில் ஆடைத் துறையின் விரிவாக்கத்துக்காக இதுவரை 7 கோடியே 30 லட்சம் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள முதலீடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டொன் பிரியசாத்தின் சகோதரர் வெல்லம்பிட்டியவில் படுகொலை!

## போதைப்பொருள் வர்த்தக முரண்பாடு காரணம் என சந்தேகம்

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகொடவத்தை – மேம்பாலம் அருகே, மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் நபர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சிங்கள கடும்போக்கு அமைப்பொன்றின் செயற்பாட்டாளராகக் கருதப்படும் டொன் பிரியசாத்தின் சகோதரான மீதொட்டமுல்லை – கலங்சூரிய பகுதியைச் சேர்ந்த 34 வயதான பிரகாஷ் திலின குமார என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு பதிவாகியுள்ளது.

வழமையாக இரவு வேளையில் மேற்படி நபர் நண்பர்களுடன் ஒருகொடவத்தை மேம்பாலத்தின் அருகே நேரத்தைசெலவழிப்பதாகத் தெரிவிக்கும் பொலிஸார், இவ்வாறான சந்தர்ப்பமொன்றிலேயே, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கூரிய ஆயுதம் கொண்டு அவரை வெட்டி படுகொலை செய்துள்ளனர் எனக் கூறினர்.

கொலை செய்யப்பட்ட நபரும் இதற்கு முன்னர் பலரை கூரிய ஆயுதங்களால் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டுக்காக விளக்கமறியலில் இருந்துவிட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், நீதிமன்ற உத்தரவில் அவர் ஒவ்வொரு மாதமும் வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட்டு வந்தார் எனவும் பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில் வெல்லம்பிட்டி பொலிஸார் இந்த கொலை தொடர்பில் முன்னெடுத்த ஆரம்பகட்ட விசாரணைகள் பிரகாரம், போதைப்பொருள் வர்த்தகத்தின் பிரதிபலனாக இந்தக் கொலை நடந்துள்ளதாக சந்தேகிக்கும் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# பெருந்தொகையான வட்டிப் பணத்தை செலுத்திய ஸ்ரீலங்கன் விமான சேவை

இலங்கையின் தேசிய விமான சேவை நிறுவனமான ஸ்ரீலங்கன் விமான சேவை, 2024 ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய உத்தரவாதப் பத்திரத்திற்கான வட்டித் தொகையை செலுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய ஒரு கோடியே 75 லட்சம் அமெரிக்க டொலர் உத்தரவாதப் பத்திரம் தொடர்பான வட்டியை செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஓர் அறிக்கையை வெளியிட்ட விமான நிறுவனம், நிறுவனத்தின் நிதியைப் பயன்படுத்தி பொருந்தக்கூடிய சலுகைக் காலத்துக்குள் வட்டி முழுவதுமாக செலுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

# எதிர்வரும் மாதத்திற்கான எரிபொருள் கொள்வனவு நிச்சயமற்றதாகவுள்ளது

## மத்திய வங்கியின் ஆளுநர் தகவல்



எரிபொருள் கொள்முதலுக்காக கட்டணம் செலுத்திய கப்பல்களே தற்போது நாட்டை வந்தடைகின்றன. எதிர்வரும் மாதத்துக்கான எரிபொருள் கொள்வனவு நிச்சயமற்றதாக உள்ளது.

சீனா, இந்தியாவிடமிருந்து சாதகமாக பதில் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டால் மாத்திரமே ஏனைய நாடுகள் நம்பிக்கையுடன் ஒத்துழைப்பு வழங்கும்.

இந்தியா மாத்திரமே நெருக்கடியான சூழ்நிலையில் கடனுதவி திட்டத்தின் ஊடாக நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

நாட்டின் உள்ளக அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகள் பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை முழுமையாகத் தாமதப்படுத்தியுள்ளன.

அரசியல் ஸ்திரத்தன்மையில்லாவிடின் பொருளாதார நெருக்கடி மேலும் ஒப்பிட முடியாத அளவிற்கு தீவிரமடையும் என்பதை சகலரும் பொறுப்புடன் விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிதி நிலைமை தொடர்பில் தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு நீண்டகால கொள்கை அடிப்படையில் தீர்வு காண வேண்டும்.

மத்திய வங்கியின் ஆளுநராகக் கடந்த ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டேன். அன்றிலிருந்து, இதுவரை இரண்டு அரசாங்கங்கள் மாற்றமடைந்துள்ளன. இவ்வாறான ஸ்திரமற்ற தன்மை எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது.

அரசியல் நெருக்கடி தீவிரமடைந்தால் பொருளாதார நெருக்கடி மேலும் பாரதூரமானதாக அமையும். அரசியல் ஸ்தீரத்தன்மை தொடர்பாகத் திருப்தியடையும் தன்மை கிடையாது. அரசியல் ஸ்திரமான முறையில் காணப்பட்டால் பல பிரச்சினைகளுக்கு முன்னேற்றகரமான தீர்வுகளை எட்டியிருக்கலாம்.

அரசியல் நெருக்கடியால் ஏற்பட்ட காலதாமதம் பல திட்டங்களைத் தாமதப்படுத்தியது. சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக ஆராயும் போது அவர்கள் அரசியல் ஸ்திரத்தன்மையை முதனிலைப்படுத்துகிறார்கள். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் அரசியல் ஸ்திரத்தன்மை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஊழியர் மட்ட ஒத்துழைப்பை எதிர்வரும் மாதம் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கிறேன்.

இருப்பினும் அதற்கான நிலையான மற்றும் அமைதியான சூழலை அரசாங்கம் ஸ்திரப்படுத்த வேண்டும். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டால் மாத்திரமே ஏனைய நிதி பெறல் தொடர்பாக அவதானம் செலுத்த முடியும்.

நாட்டின் உள்ளக அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள் பொருளாதார மீட்சி மற்றும் நெருக்கடிக்கான தீர்வு காணல் திட்டங்களை முழுமையாகத் தாமதப்படுத்தியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள தொழினுட்ப ஒத்துழைப்பிற்கான திட்டங்கள் முறையாகவே முன்னெடுக்கப்படுகின்றன.

சீனாவின் கடன் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களால் இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளது எனக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் மொத்த அரச கடனில் சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் 700 கோடி டொலராக காணப்படுகிறது.

2005 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் கட்டுமான நிர்மாணப் பணிகளுக்காக சீனா பெருமளவிலான கடனுதவியை வழங்கியுள்ளது. மெகா அபிவிருத்திகளுக்காகவே சீனா அதிக கடன்களை வழங்கியுள்ளது.

ஜப்பான் வழங்கும் கடனுக்கான வட்டி மிகவும் குறைவானதாகக் காணப்படுவதுடன், ஒழுக்கமானது. சீனா நீண்டகால அடிப்படையில் கடன் வழங்காது. ஜப்பானை காட்டிலும் சீனாவின் கடனுக்கான வட்டி அதிகளவில் உள்ளது.

சீனாவின் கடன் திட்டம் தொடர்பில் ஒவ்வொரு நாடுகளிலும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

வெளிநாட்டு கையிருப்பை அதிகம் ஈட்டிக் கொள்ளும் வகையிலான அபிவிருத்தித் திட்டங்களுக்காக அதிக அரசமுறை கடன்கள் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

ஒருசில அபிவிருத்திகளால் எவ்வித பயனும் கிடைக்கப்பெறவில்லை. கடன் பெறுவது தவறல்ல, இருப்பினும் பெற்றுக்கொண்ட கடனால் அதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ள வேண்டும். ஜப்பானிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களால் நாடு அதிக பயனைப் பெற்றுக்கொண்டுள்ளதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

பதவியேற்கும் போது வெளிநாட்டு கையிருப்புகளில் பாவிக்கக் கூடிய பெறுமானங்கள் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டன. இந்திய கடனுதவி திட்டத்தால் பல பிரச்சினைகளுக்கு ஒப்பீட்டளவில் தீர்வு காண முடிந்துள்ளது. கடனுதவி திட்டத்தை தொடர்ந்து வழங்குமாறு இந்தியாவிடம் கோரியுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை முழுமையாக பெற்றுக்கொண்டா மாத்திரமே சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும். இருப்பினும் இந்தியா எவ்வித நிபந்தனைகளுமில்லாத நிலையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் வரை பிற நாடுகள் உதவி செய்யாது. அதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு அந்நிய செலாவணி மற்றும் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் ஊடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

எரிபொருள் கொள்வனவு தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். நெருக்கடியான சூழ்நிலையில் எரிபொருள் கப்பலுக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது, அந்த கப்பல்களே தொடர்ச்சியாக நாட்டை வந்தடைகின்றன.

எரிபொருள் இறக்குமதிக்கு மாத்திரம் மாதாந்தம் 40 கோடிக்கும் அதிகமான டொலர் அவசியமாகவுள்ளது. இருப்பினும் கைவசமுள்ள பாவிக்க கூடிய கையிருப்பு வரையறுக்கப்பட்டதாகவுள்ளது.

தற்போது இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை எதிர்வரும் மாதத்தின் முதல்வாரம் வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்க முடியும்.

இருப்பினும் அதற்கு பின்னர் எரிபொருள் கொள்வனவு நிச்சயமற்றதாக உள்ளது. இந்தியா மற்றும் சீனாவிடம் ஒத்துழைப்பைக் கோரியுள்ளோம். இருப்பினும் சாதகமான பதில் கிடைக்கப்பெறவில்லை. தற்போதைய நிலையில் வெளிநாட்டு உதவிகளும் உறுதியற்ற நிலையில் உள்ளன. – என்றார்.

# பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கொவிட் மரணங்களை தடுக்கமுடியாத நிலை

## உபுல் றோஹண எச்சரிக்கை



தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்தால், கொரோனா மரணங்களை தடுக்க முடியாது போகும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

எனவே, கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அனைத்து சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் பின்பற்றுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது, இலங்கையில் உள்ள 365 சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களிலும் அன்டிஜன் பரிசோதனைக்கு தேவையான வசதிகள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பல இடங்களில் PCR சோதனை களை நடத்துவதற்கு தேவையான பொருள்கள் இல்லை எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித் துள்ளார்.

எனவே, நோயாளிகளின் எண்ணிக்கை கண்டறியப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையை விட ஐந்து மடங்கு அதிகமாக இருக்கலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் சிறிய அறிகுறிகளுடன் உள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது, அவர்களை உறுதிப்படுத்தத் தேவையான ஆய்வக வசதிகள் இல்லை எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

மேலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நோயாளிகள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவது அதிகரித்தால், இறப்பு எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கக் கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடியால் இதைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கலாம் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, கொரோனா பரவுவதைக் குறைப்பதற்கான ஒரே தீர்வு, முடிந்தவரை சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதாகும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

# கோட்டாவை கைதுசெய்யும் நகர்வை முன்னெடுத்துள்ளார் ஜஸ்மின் சூக்கா!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாக கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் சிரேஷ்ட அதிகாரி ஜஸ்மின் சூக்கா, சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் 63 பக்கத்திலான முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஒவ்வொன்றாக ஜஸ்மின் சூக்கா குறிப்பிட்டுள்ளார். அத்துடன் கோட்டாபய ஜனாதிபதி சிறப்புரிமைகளை இழந்துள்ளார் எனவும், இந்த வழக்கு சர்வதேச நீதிமன்றத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் சாட்சிகளையும் பெயரிட்டுள்ளார், ஆனால் அவர்கள் யார் என்பதை வெளியிடவில்லை.




சிங்கப்பூர் உலகளாவிய நீதிமன்ற அமைப்பில் இணைந்தநாடாகும். ஆனால் சூக்காவின் கோரிக்கைக்கு சிங்கப்பூர் சட்டமா அதிபர் இன்னமும் பதிலளிக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

மாலைதீவில் உள்ள கன்ஷி தீவில் இருந்து சிங்கப்பூர் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 15 நாள் சிங்கப்பூர் விசாவைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

தற்போது எந்த நாட்டில் கோட்டாபய இருக்கிறார் என்பது தொடர்பான தகவல் எதுவும் வெளியாகவில்லை. ஆனால் அவர் டுபாயில் இருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கான முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவு தொடரும்!

## ஜனாதிபதி ரணிலுக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்து

இலங்கையின் நெருங்கிய நண்பனாகவும், அண்டை நாடாகவும் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கான முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்து கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த பதவி காலம் இலங்கையின் அனைத்து பிரஜைகளினதும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதுடன், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் ஊட்டமளிக்கும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கையின் 8 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கையில் நிலவும் மிக நெருக்கடியான காலகட்டத்தில் நீங்கள் பொறுப்புக்களை ஏற்றுள்ளீர்கள்.

உங்களின் இந்தப் பதவி காலம் இலங்கையின் அனைத்து பிரஜைகளினதும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதுடன், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் ஊட்டமளிக்கும் என்று நம்புகின்றேன்.

இலங்கையின் நெருங்கிய நண்பனாகவும் , அண்டை நாடாகவும் ஜனநாயக வழிமுறைகளின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசமைப்பு கட்டமைப்பின் மூலம் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கான இலங்கை மக்களின் முயற்சிக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்.

இரு நாட்டு மக்களதும் பரஸ்பர நலனுக்காகவும் , இரு நாடுகளுக்கிடையிலான பழைமையானதும், நெருக்கமானதுமான நட்புறவுகளை மேலும் வலுப்படுத்தவும் உங்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற எதிர்



பார்க்கின்றேன். உங்கள் பதவிக் காலம் வெற்றிகரமானதாக அமைய வாழ்த்துகின்றேன். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிள்ளையானின் முக்கிய சகாவின் சாட்சியத்தால் கைதாகின்ற ஆபத்தில் கோட்டாபய ராஜபக்ஷ

பிள்ளையானின் சகாக்கள் கொலை, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல், மட்டக்களப்பு ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைகள் போன்ற சம்பவங்கள் தொடர்பில் சில ஆதாரங்களின் மூலம் சிக்கியுள்ளனர் என இலங்கையில் இருக்கும் புலனாய்வுச் செய்தியாளரும், அரசியல் ஆய்வாளருமான எம். எம்.நிலாம்டீன் தெரிவித்துள்ளார்.

இந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் கோட்டாபயவிற்கு எதிராக பல ஆதாரங்கள் திரட்டப்பட்டுள்ள நிலையில், விரைவில் அவர் கைது செய்யப்பட வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக 64 பக்கங்களை கொண்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில்,சிங்கப்பூரில் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ இருப்பாராயின் அவர் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுவார். மேலும்,இவர் இரண்டு வாரங்களில் முன்னாள் ஜனாதிபதி எனும் சிறப்புரிமையின்கீழ் கறுப்புஉடை அணிந்த பாதுகாப்பு பிரிவினரினால் கௌரவமாக மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார் எனவும் தெரிவித்துள்ளார்.

# கியூ.ஆர். அனுமதிக்கு 40 லட்சம் பேர் பதிவு!

நாடளாவிய ரீதியில் 40 லடசம் பேர் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்திற்காக பதிவுசெய்துள்ளனர்.

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 299 சிபெட்கோ மற்றும் 34 ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையங்களில் கியூ.ஆர். முறையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், செவ்வாய்க்கிழமை வரை மொத்தமாக 92 ஆயிரத்து 845 வாகனங்களுக்கு கியூ.ஆர். முறையில் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சியில் எரிபொருள் விநியோக நடைமுறைகள் தொடர்பான விளக்கம்!

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு அதற்கென மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டை மற்றும் தேசிய அளவில் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள கியு.ஆர். ஆகிய இரண்டையும் சமர்ப்பிக்கவேண்டும். கியு.ஆர். முறைமை அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் வெற்றிகரமாகச் செயற்படத் தொடங்கும் வரையில் எரிபொருள் விநியோக அட்டைப் பயன்பாடு கட்டாயமானது என மாவட்ட செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இதுவரை எரிபொருள் விநியோக அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தங்கள் பகுதி கிராமசேவையாளர்கள் ஊடாக உடனடியாக அதனைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அதேபோல், கியு.ஆர். பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவோர், பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தில் இதற்கென இயங்கும் விசேட கரும பீடங்கள் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

### எரிபொருள் பங்கீட்டு அட்டை

விவசாயிகள்(பச்சை), கடற்றொழிலாளர்(நீலம்), வாடகை வாகனம்(மஞ்சள்), பாரவூர்தி(செம்மஞ்சள்)), டிப்பர்(ஊதா), அத்தியாவசிய,அரச சேவை உத்தியோகத்தர்(சிவப்பு), பொதுமக்கள்(வெள்ளை) என ஒவ்வொரு துறை சார்ந்தவர்களுக்கும் என தனித்தனியே எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான விநியோக அட்டைகள் மாவட்ட செயலகத்தால் தயாரிக்கப்பட்டு, பிரதேச செயலாளர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்த விநியோக அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்கள் பகுதி கிராமசேவையாளர் ஊடாக அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### கியு.ஆர். கோட்

அரசாங்கத்தால் தேசிய அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த முறைமை, அரசாங்கத்தின் அறிவிப்பின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இதுவரையில் பரீட்சிக்கப்பட்டு வெற்றியளித்துள்ளது. ஏனைய எரிபொருள் நிலையங்களிலும் இதனைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை இதனைச் செய்துகொள்ளாதவர்கள் தங்கள் பகுதி பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட கருமபீடங்களின் ஊடாக இதனைச் செயற்படுத்திக்கொள்ள முடியும்.

### இரண்டும் அவசியம்

கியு.ஆர். கோட் முறைமை முழு அளவில் செயற்பாட்டுக்கு வரும் வரையில், இரட்டை விநியோகத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் விநியோக அட்டை, கியு.ஆர் கோட் இரண்டையும் சமர்ப்பித்தே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### விநியோக நடைமுறை

147, 271 இற்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்ட, 1,279 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 10 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு ஊடாகவே எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்மைய காலம் வரையில் கிளிநொச்சி மாவட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

ஜூன் மாத முற்பகுதியில் கிளிநொச்சி நகரிலுள்ள இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்ற பெற்றோல் அத்தியாவசிய சேவை என்ற அடிப்படையில் சுகாதாரத்துறையினருக்கு முன்னுரிமை அடிப்படையிலும், மேலதிகமாகக் கல்வித்துறை சார்ந்தோர் மற்றும் அரச பொதுமக்களில் ஒரு பிரிவினருக்கும் வழங்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் இரண்டு தடவைகள் சுகாதாரத் துறையினருக்கான விசேட ஒதுக்கீடாகவே மாவட்டத்துக்குப் பெற்றோல் கிடைக்கப்பெற்றிருந்தது. இருந்தும், சுகாதாரத்துறையினருடன் கலந்துரையாடி, கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள் உள்ளிட்ட சில அத்தியாவசிய சேவைகள உத்தியோகத்தர்களுக்கும் ஒரு பகுதி பெற்றோல் வழங்கப்பட்டது.

இதுதவிர, நெற்செய்கையாளர்கள் அறுவடைக்கென முன்கூட்டியே கோரியிருந்த டீசல் படிப்படியாக அவர்களுக்கு உரிய முறையில் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருவதுடன், சுகாதாரத்துறை உள்ளிட்ட ஏனைய சில அத்தியாவசியசேவை நிறுவனங்களுக்கு இருப்பைப் பொறுத்து டீசல் விநியோகம் மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

பெற்றோல் விநியோகம் பெருமளவு தடைப்பட்டிருந்த காலத்தில் ஐ.ஓ.சி. நிரப்பு நிலையங்கள் ஊடாக நாடளாவிய ரீதியில் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றபோதும், கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த நிறுவனத்தின் கிளைகளோ, முகவர்களோ இல்லாத காரணத்தினால் இங்கே அந்த விநியோகத்தைப் பெற்றுக்கொடுக்க முடிந்திருக்கவில்லை.

நீண்ட இடைவெளியின் பின்னர் இப்போதுதான் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிலையங்கள் ஊடாக மீண்டும் பெற்றோல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலம் பெற்றோல் பெற்றுக்கொள்ளாது இருந்துவந்த கிளிநொச்சி மாவட்ட மக்கள் இதனால் பெற்றோலைப் பெற்றுக்கொள்வதற்காக பெருமளவில் முண்டியடிக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இருந்தாலும், பொதுமக்களது நலன்களைக் கருத்தில் கொண்டு மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எரிபொருள் கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு நிரப்பு நிலையங்களிலும் நேரடியாக நின்று பொதுமக்களுக்கு உரிய முறையில் பெற்றோல் விநியோகம் நடைபெறுவதற்குப் பாடுபட்டு வருகின்றனர்.

எரிபொருள் கிடைக்கப்பெறும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டுள்ள நிரப்பு நிலையங்களுக்கு பெரும்பாலும் மாலை நேரங்களிலேயே எரிபொருள் கிடைக்கப்பெறுவதால் அன்றையதினமே எரிபொருள் விநியோகத்தை செய்ய முடியாத நிலை காணப்படுகிறது எனினும், அன்றையதினம் எரிபொருள் வரிசையில் நின்றவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு விசேட தொடர் இலக்கங்கள் வழங்கப்பட்டு, அடுத்தநாள் அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும், அந்த நாளுக்குரிய வாகன இறுதி இலக்கங்களுக்குரியவர்களுக்கு அதன் பின்னரும் என எரிபொருள் விநியோகத்தை பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஒழுங்குபடுத்தி வழங்கி வருகிறார்கள்.

இந்த அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காக, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வந்து சேர்ந்துவிட்டதாக மாவட்ட செயலகத்தால் அறிவித்தல் வழங்கப்படும் வரையில் வீணாக வரிசையில் நின்று சிரமங்களுக்கு உள்ளாகவேண்டாம் என்று பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.